செய்தி வெளியீடு எண்:1359 நாள் : 16.12.2021

## செய்தி வெளியீடு

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க 2022 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்திற்காக மாநிலம் முழுவதும் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு (SVEEP) நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 12வது தேசிய வாக்காளர் தின கொண்டாட்டம், 2022 வரை நடைபெறும். இதன் ஒரு பகுதியாக, மாநில அளவிலான இயங்கலை போட்டிகள் (Online competitions) “SVEEP போட்டி – 2022” என்ற தலைப்பின் கீழ் பின்வரும் பிரிவுகளுக்கு நடத்தப்படுகின்றன:

1. ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்கள்
2. கல்லூரி மாணவர்கள்
3. பொது மக்கள் (18 வயதிற்கு மேல்) மற்றும்
   (மாவட்ட அளவிலான போட்டியில் கலந்து கொள்ளத் தவறிய மாணவர்கள்.)

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஓவியம் வரைதல், சுவரொட்டி வரைதல், ஒரு வரியில் விழிப்புணர்வு வாசகம் எழுதுதல், பாட்டு, குழு நடனம் மற்றும் கட்டுரை போட்டி போன்றவை மாவட்ட அளவில் அந்தந்த மாவட்டத் தேர்தல் அதிகாரியால் நடத்தப்படும். மேலும், பொதுமக்கள் (18 வயதிற்கு மேல்) மற்றும் மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்கத் தவறிய மாணவர்கள் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் இணையதளத்தில் (https:/www.elections.tn.gov.in/) உள்ள “SVEEP Contest – 2022” என்ற இணையவழியின் மூலமாக போட்டியில் நேரடியாக பங்கேற்கலாம். மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்க தவறிய மாணவர்கள் பொது மக்களுக்கு வரையறுக்கப்பட்ட போட்டியில் மட்டுமே பங்கேற்க முடியும்.

இயங்கலை (Online) போட்டிக்கான கருத்துருக்கள் "தேர்தல்கள், 100% வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு மற்றும் வாக்களிப்பை மேம்படுத்த இந்தியத் தேர்தல் ஆணையத்தின் முயற்சிகள்" ஆகியவையாகும். இப்போட்டியில் 31.12.2021 அன்று மாலை 5 மணி வரை பங்கேற்கலாம். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு மாநில அளவிலான தேசிய வாக்காளர் தின கொண்டாட்டத்தின் போது கீழ்கண்டவாறு பரிசுகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 5,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ. 3,000/- |
| மூன்றாம் பரிசு | ரூ. 2,000/- |

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**